**மன்னார் பிரதேச சபை**

------------------------------

**மன்னார் மாவட்டம்**

------------------------

# 1. நிதிக் கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 24 இல் சபையின் செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து மன்னார் பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதி சார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சு செயலாளரின் 2014 ஜனவரி 27 ஆம் திகதிய பீஎல்/05/பீஏ/எஸ்எவ்பீஎஸ்ஏஎஸ் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் 19 விடயங்களின் வருமான செலவினங்களின் கூட்டு மொத்த தொகை ரூபா 630,718 தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

கடந்த வருடங்களில் செலுத்தப்பட வேண்டிய 2 செலவின நிலுவைகளின் கூட்டு மொத்தத் தொகையான ரூபா 883,329 இறுதிக் கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும் அறிக்கையிடும் திகதி வரை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | சட்டம், விதி, பிரமாணம் என்பவற்றுக்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை நிதி நிர்வாக விதிகள் இலக்கம் 5(xii) | காசு, களஞ்சியம் என்பவற்றிற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து பிணைப் பணம் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | |
| | (i) பிரிவு 126 | சபை தொலைத் தொடர்பு கோபுரங்களின் வருமானங்களை அறவிடுவதற்கான உப விதிகளை சபை சட்டமாக்குவதற்குத் தவறியுள்ளது. |
| | (ii) பிரிவு 150(1) | வியாபாரங்கள் பற்றிய நிரல் ஒன்றைத் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| | (i) நிதி ஒழுங்குவிதி 371(2), (5) | உபகட்டு நிதியாக ரூபா 175,000 தீர்பனவுகள் காலம் தாழ்த்தியே மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| | (ii) நிதி ஒழுங்குவிதி 571 | காலம் கடந்த வைப்புகளின் ரூபா 891,804 ஆன வருமானத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி சார் மீளாய்வு

### 2.1 நிதி சார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி 2015 திசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாடுகளின் பெறுபேறு மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகையாக ரூபா 4,340,703 ஆக விளைந்திருந்ததுடன் ஒப்பிடும்போது இதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமான மிகை ரூபா 2,083,000 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 2,257,703 முன்னேற்றத்தைக் காட்டுகின்றமைக்கான காரணம் சபையினுடைய மீண்டுவரும் உதவுதொகை மற்றும் வருமானங்கள் உயர்வடைந்தமையே ஆகும்.

### 2.2 வருமான முகாமைத்துவம்

#### 2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையின் மீளாய்வாண்டு மதிப்பிடப்பட்ட வருமானத்திற்கும், உள்ளபடியான வருமானத்திற்கும் இடையில் ரூபா 1,056,122 வேறுபாடு அவதானிக்கப்பட்டுள்ளது.

### 2.2.2 வாடகைகள்

சபையின் அதிகாரப்பிரதேசத்திற்குள் உள்ள 03 உப அலுவலகங்களின் சந்தைக் கடை மற்றும் இறைச்சிக் கடை வருமான நிலுவை ரூபா 969,485 அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடுவதற்கு சபையினால் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 ஏனைய வருமானம்

05 தொலைத் தொடர்பு கோபுரங்களிற்கு ரூபா 105,000 அனுமதிக்கப்பட்ட வரி சபையினால் அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை பெறப்பட வேண்டிய ரூபா 28,068,038 பெறுமதியான முத்திரைத் தீர்வைக் கட்டண நிலுவைத் தொகையானது அறிக்கையிடும் திகதி வரை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்றிறனின்மை

**(அ)** பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 17 வாகனங்களுக்குமான சம்பவத்திரட்டுப் பதிவேடு (Log book) முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** பிரதேச சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் 12 வாகனங்களின் உரிமை மாற்றப்படாமையினால் நடைமுறை ஆண்டுக்கான வரி மற்றும் காப்புறுதிப்பத்திரம் என்பன புதுப்பிக்கப்படாது பயன்படுத்தப்படுகின்றன.

**(இ)** மீளாய்வாண்டில் சபையினால் பயன்படுத்தப்பட்ட 07 வாகனங்களுக்கான 870 லீற்றர் எரிபொருளுக்கான செலவினம் ரூபா 82,650 இற்கான விபரங்கள் வாகனங்களின் வாகன ஓட்ட அட்டவணையில் பதியப்பட்டிருக்கவில்லை.

**(ஈ)** 53 - 3325 வாகனம் பழுதடைந்து பாவிக்காத சமயத்தில் 20/10/2015 இல் E/1 099140 கட்டளை இலக்கத்தின் கீழ் 50 லீற்றர் டீசல் வழங்கப்பட்டிருந்தது.

**(உ)** மூன்று உழவு இயந்திரப் பெட்டிகள் பாவனை இன்றி காணப்படுகின்றன.

### 3.2 செயற்பாட்டு அறிக்கை

மத்திய அரசு பொது நிதி பணிப்பாளர் நாயகத்தின் 2010 மார்ச் 10 ஆம் திகதிய PF/R/2/2/3/5/(4) ஆம் இலக்க கடிதத்தின் 1:4:1 ஆம் பந்தியின் படி வருடாந்த செயற்பாட்டு அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் சபையினால் மீளாய்வு ஆண்டிற்கான செயற்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. நல்லாட்சியும் கணக்களிப்பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட 38 தலைப்புகளிற்கான கூட்டுமொத்தத் தொகையான ரூபா 2,985,444 செலவினங்களின் ஒதுக்கீடுகள் 40 வீதம் தொடக்கம் 100 வீதம் வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ)** மீளாய்வாண்டில் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட 03 மூலதன செலவினங்களுக்கான கூட்டுமொத்தத் தொகை ரூபா 736,600 செலவினங்களின் ஒதுக்கீடுகள் முற்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமானச் சேகரிப்பு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பெறவேண்டிய கணக்குகள்
(ஈ) நிலையான வைப்புக்கள்
(உ) முற்பணப் பதிவேடு
(ஊ) வாக்குப்பணப் பேரேடு
(எ) அலுவலர் கடன் அறவீட்டு பதிவேடு